சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.12/2023

பெயர் திரு. ஷண்முகம் நாள் 23.02.2026
த/பெ. கணபதி

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்கு சொத்திற்கான கணினி பட்டா நகல்கள் **வா.த.சா.ஆ.1 மற்றும் 2.** செய்யூர் காவல் நிலையத்தில் நான் அளித்த புகாரின் கை நகல் **வா.த.சா.ஆ.3.** அதற்கான புகார் மனு ஏற்பு சான்றிதழ் அசல் **வா.த.சா.ஆ.4.** செய்யூர் காவல் நிலையத்தில் 04.11.2022 மற்றும் 22.11.2022 நான் அளித்த புகாரின் கை நகல்கள் **வா.த.சா.ஆ.5 மற்றும் 6.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கு சொத்திற்கு அனைத்து திசைகளிலும் 1ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது. வழக்கு சொத்திற்கான புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை. அந்த நான்கு திசைகளிலும் யாருடைய நிலம் உள்ளது என்பதற்கான பட்டா நகல் தாக்கல் செய்யவில்லை. நான் வழி கோரும் நிலத்திற்கான பட்டா மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவில்லை. நான் வழி கோரும் நிலத்திற்கான சொத்து தெய்வயானை பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெயரில் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய நிலம் புஞ்சை நிலம். அங்குள்ள மற்ற நபர்கள் பயிர் செய்ய மாட்டார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்தை சுற்றி வேலி ஏதும்

போடவில்லை என்றால் சரிதான். என் நிலத்தை சுற்றி நான்கு புறமும் வழி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூல் வழக்கு சொத்தை பார்வையிட்டால் தான் வழி பற்றி தெரிய வரும் என்று சொன்னால் சரியல்ல.

2) நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி நான் மனு தாக்கல் செய்துள்ளேன். 2022 ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நான் என்ன பயிர் செய்தேன் என்றால் வேர்க்கடலை பயிர் செய்தேன். அந்த வேர்கடலையை சித்திரை மாதம் அறுவடை செய்தேன். அந்த வேர்கடலை பயிர் செய்வதற்கு டிராக்டர் மூலம் நிலத்தை உழுதேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தான் டிராக்டர் எடுத்து செல்வதற்காக பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வழி விடவில்லை என்பதால் வேறு மாற்று வழி மூலம் டிராக்டர் எடுத்து சென்று நிலத்தை உழுது விட்டேன் என்றால் சரிதான். எனக்கு மாற்று வழி உள்ளது என்றாலும், பிரதிவாதியிடம் வம்பு வளர்ப்பதற்காக அவருடைய நிலத்தில் வழி விட கோரி வீண் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பயிர் செய்தால் அந்த நிலத்தின் மூலம் செல்ல இயலாது என்றால் சரிதான்.

3) பிரதிவாதி அவருடைய சொத்தில் பயிர் செய்த போது வேண்டுமென்றே நான் டிராக்டர் வைத்து, அந்த பயிரை சேதப்படுத்த முயற்சி செய்தேன் என்றாலும், அதனால் தான் பிரதிவாதிகள் என்னைத் தடுத்தனர் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிகள்

நிலத்தில் சாலை அமைக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. உரிய தரப்பினரை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் உரிமை கோரும் சொத்திற்கு முறையான அளவுகள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் நீள மற்றும் அகலம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தில் நான் செம்மரம் நடவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் இரண்டரை ஆண்டுகளாக மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் வேறு பயிர் செய்யவில்லை என்றாலும், அதனால் அந்நிலத்திற்கு நான் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றாலும் சரிதான். அதனால் எனக்கு வழி தேவைப்படாது என்றாலும், பிரதிவாதிகள் நிலத்தை அபகரிக்க பொய்யான வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு மணப்பாக்கம் ஊர் வழியாக மாற்று வழி உள்ளது என்றால் சரியல்ல. எனவே என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை.